**பதில் முதன்மை பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் தோமஸ் ஜே. வைடா**
**பாத்ஃபைன்டர் அமைப்பின் குழு கலந்துரையாடலில் ஆற்றிய ஆரம்ப உரை**
**கொழும்பு, இலங்கை**
**பெப்ரவரி 14, 2019**

**உரையின் முழுவிபரம்**

**பதில் முதன்மை பிரதி உதவி இராஜாங்கச் செயலாளர் வைடா:** மிக்க நன்றி. இதில் கலந்துகொள்வது பெரும் மகிழ்ச்சியழிப்பதுடன், இரண்டு அறிவு மோதைகளுடன் இந்த மேடையில் இணைந்துகொள்வது கௌரவமாகவும் உள்ளது. எனது நாட்டுக்கு தூதுவராக சேவையாற்றுவது உட்பட தூதுவர் சேவையில் தனிச்சிறப்பும் கௌரவமும் கொண்ட தூதுவருக்கும் உங்களது கடற்படையின் முன்னாள் தளபதிக்கும் அருகில் இருப்பதும் எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தமை மற்றும் இந்து-பசுபிக் தொடர்பான அமெரிக்காவின் கொள்கையில் காண்பிக்கும் ஆர்வம் என்பவற்றுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கு குறிப்பிட்டதைப் போன்று நான், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிராந்தியத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் நாடுகடந்த மற்றும் பொருளாதார விவகாரங்களுக்குப் பொறுப்பான பதில் முதன்மை பிரதி உதவிச் செயலாளர். இது அமெரிக்காவின் இந்து-பசுபிக் நோக்கத்தை நடைமுறைப்படுத்துவதை உள்ளடக்கியது, இதனையே நான் இன்று பேசுவதற்கும் திட்டமிட்டுள்ளேன். இந்தப் பிராந்தியத்தில் இலங்கையின் முக்கிய பங்களிப்பு விசேடமானதாக இருக்கும்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தின் இணைவாக அமைந்திருப்பதால் இலங்கை பிராந்தியத்தின் எதிர்காலத்தை சீர்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. இந்தப் பிராந்தியத்தில் உள்ள அனைத்து நாடுகளும் செழிப்பாக இருப்பதற்கு அவற்றின் எதிர்காலம் விதிசார்ந்த வரிசை, அபிவிருத்தியில் வெளிப்படையான தரம், உதவி, உட்கட்டமைப்புத் திட்டங்கள், அடிப்படை சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்கான கௌரவம் வழங்கல்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டவையாக இருக்க வேண்டும்.

2017ஆம் ஆண்டு APEC மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ட்ரம்ப் சுதந்திரமான மற்றும் திறந்த இந்து-பசுபிக் பற்றிய தனது நோக்கத்தை கோடிட்டுக்காட்டியிருந்தார். “இறைமையுள்ள மற்றும் சுதந்திரமான நாடுகள் பரந்துபட்ட கலாசாரம் மற்றும் பல்வேறு கனவுகளைக் கொண்ட, செழிப்பான சுதந்திரம் மற்றும் சமாதானத்தைக் கொண்டவை” என அவர் இந்து-பசுபிக் பிராந்தியத்தை குறிப்பிட்டிருந்தார். இந்த நோக்கமானது எமது செயற்பாட்டை நெறிப்படுத்தவும், இலங்கை போன்ற பங்குதாரர்களின் இலக்குகளைப் பூர்த்தி செய்வது போன்றவற்றைத் தொடர உதவுகிறது.

எமது அணுகுமுறையின் கீழ், முரண்பாடுகளை அமைதியான முறையில் தீர்ப்பது, வழிநடத்தல் சுதந்திரம், முதலீட்டு சூழலுக்கான திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மை மற்றும் ஆளும் நிறுவனங்களின் பலம் மற்றும் பொறுப்பை உறுதிப்படுத்துவது போன்ற கொள்கைகளை மதிக்கக் கூடிய வகையில் இந்து-பசுபிப் பிராந்தியத்தில் விதி சார்ந்த ஒழுங்கை உறுதிப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை போன்ற பங்காண்மை நாடுகளுடன் இணைந்து செயற்படுகின்றோம். இந்தக் கொள்கைகள் இங்கும் ஏனைய இடங்களிலும் கடந்த தசாப்தங்களில் பாரிய வளர்ச்சி மற்றும் செழிப்பை ஏற்படுத்துவதற்கான சூழலை உருவாக்கியிருப்பதுடன், பிராந்தியத்தின் எதிர்காலத்துக்கு இவை மிகவும் முக்கியமானது என்பது எமது பார்வையாகும்.

இது பிரத்தியேகமான மூலோபாயமோ அல்லது உறவுகள் பற்றிய முன்மொழிவுகளையோ நாம் இலங்கை போன்ற பங்காளர்களுக்கு முன்வைக்கவில்லை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்டவேண்டும். இலங்கை இறைமை உள்ள நாடு என்பதுடன், அதன் இறைமைக்கு நாம் மதிப்பளிக்கின்றோம். இந்து-பசுபிக் செயற்றிட்டத்தில் ஏனைய நாடுகளிலும் இது எம்மை வழிப்படுத்தும். இந்தப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடன் பரஸ்பர நன்மையளிக்கும் பங்காண்மையை இலங்கை உருவாக்கி அதனைப் பேணும் என்றும், அமெரிக்காவைப் போன்று ஏனைய உலக நாடுகளுடன் அவ்வாறான உறவுகளை ஏற்படுத்தும் என்றும் நாம் முழுமையாக

எதிர்பார்க்கின்றோம். இருந்தபோதும் அவ்வாறான பங்காண்மைகள் யாவும் வெளிப்படையானவையாகவும், நீண்டகாலமாக இணைந்துள்ள சகல தரப்பினருக்கும் உண்மையான நன்மைகளை அளிப்பவையாகவும் இருக்க வேண்டும். கொடுக்கல் வாங்கல்கள் சுய வர்த்தக நோக்கம் கொண்டதாக இருப்பதுடன், மறைமுகமான நிகழ்ச்சி நிரல்கள் எதிர்காலத்தை அடகுவைப்பதுடன், நீண்டகால நிலைப்புத்தன்மை மற்றும் பிராந்தியத்தின் ஆயுளையும் குறைக்கும்.

அமெரிக்காவுடனான பங்காண்மையின் கீழ் இலங்கையை வலுவடையச் செய்வது மற்றும் சமத்துவமான வாய்ப்புக்கள், சகலருக்கும் நன்மை ஏற்படுத்தும் வகையில் பாரிய வளர்ச்சியை ஏற்படுத்துவதே இரு தரப்பு உறவுகள் மற்றும் இந்து-பசுபிக் திட்டத்தின் கீழான ஈடுபாடு என்பவற்றில் எமது இலக்காகும்.

குறிப்பாக அபிவிருத்தி மற்றும் உட்கட்டமைப்பில் இலங்கைக்கு நாம் வழங்குவது உண்மையான மற்றும் வெளிப்படையான பங்காண்மையாகும். இலங்கைக்கு பொருளாதார ரீதியில் நன்மையை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள், தனியார் முதலீடுகளை ஈர்த்தல் மற்றும் நிலைத்திருக்க முடியாத கடன்களைத் தவிர்த்தல் போன்றவற்றுக்கே அமெரிக்கா உதவிகளை வழங்கும்.

இந்தப் பிராந்தியத்தில் இலங்கையை நாம் மிகவும் முக்கியமான பங்காளராகப் பார்ப்பதால் இது குறித்து ஆச்சரியப்பட தேவையில்லை. அமெரிக்காவே இலங்கையின் பாரிய ஏற்றுமதி சந்தையாகும். இதனால் விவசாயம், உற்பத்தி மற்றும் சேவைத்துறைகளில் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலையாப்புக்களை வழங்க வழிகோலியுள்ளது. அமெரிக்க கம்பனிகள் இலங்கையில் 300 மில்லியன் டொலர்களுக்கும் அதிகமான முதலீடுகளை மேற்கொண்டிருப்பதுடன், நூற்றுக்கணக்கானவர்களுக்குத் தரமான வேலைவாயப்புக்களையும் ஏற்படுத்தியுள்ளன.

அமெரிக்க கம்பனிகள் கேள்விப்பத்திரங்களுக்கு விண்ணப்பித்து அதில் வெற்றிபெற்று அல்லது பியகமவில் உள்ள கொக்ககோலா தொழிற்சாலை போன்று புதிய உற்பத்தித் தொழிற்சாலைகளை அமைக்கும்போது சிறந்த தொழில்நுட்பம், திறன் என்பவற்றைக் கொண்டு வருவது மாத்திரமன்றி இலங்கையின் பங்காளர்களுடன் அவற்றை பகிர்ந்துகொள்கின்றன. தகவல் தொழில்நுட்பம் மற்றும் சரக்குப் பரிமாற்றத்துக்கான கேந்திரநிலையமாக இலங்கை மாறினால் தற்பொழுது இருப்பதைவிட பலமடங்கு அதிகமான அமெரிக்க முதலீடுகள் மற்றும் வர்த்தகங்களுக்கு முக்கியமானதாக அமையும்.

நல்லாட்சி, பொறுப்புவாய்ந்த மற்றும் உள்ளார்ந்த பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகள், பொறுப்புக்கூறல், முக்கியமாக சட்டத்தின் ஆட்சி போன்றவற்றின் ஊடாக பொருளாதாரப் பலத்தை உருவாக்கி அதனூடாக சாத்தியத்தன்மையொன்றை இலங்கை ஏற்படுவதைப் பார்ப்பதற்கே நாம் விரும்புகின்றோம்.

இலங்கையில் நிலையான மற்றும் உள்ளார்ந்த பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு இணைந்து செயற்பட அமெரிக்காவில் உள்ள நாம் தயாராகவுள்ளோம். இதில் பெரும்பகுதியானது தொழில்முனைப்புக்களை ஊக்குவிப்பது மற்றும் புத்தாக்கமான முறையில் திட்டங்களை யதார்த்தமாக்கக் கூடிய இலங்கையின் இளம் புத்திசாலைகளுக்கு ஒத்துழைப்புக்களை வழங்குவதாகவிருக்கும். இந்த அடிப்படையில் அமெரிக்கத் தூதரகம் பல்வேறு திட்டங்களுக்கு ஆதரவு வழங்கிவருகிறது. இலங்கையில் தொழில்முயற்சியான்மை பாடத்திட்டத்துக்கு யூஎஸ்எயிடினால் முன்னெடுக்கப்படும் 'யூலீட்' திட்டம் புரட்சிகரமானதாக அமைந்துள்ளது. இது இலங்கையில் உள்ள இளம் தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் வாழ்வாதாரப் பயிற்சிகளை வழங்குவதற்கான புதியதொரு கருவியாக அமைந்துள்ளது.

கடந்த வருடம் அமெரிக்கத் தூதரகம், மாத்தறை மாவட்ட வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனத்துடன் இணைந்து அமெரிக்க புத்தாக்க மையமொன்றை (American Innovation Hub) அங்குரார்ப்பணம் செய்திருந்தது. மாத்தறை நகரத்தில்

வேலைவாய்ப்புக்கள் மற்றும் இளைஞர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி, புதுமை மற்றும் புத்தாக்கத்தை ஊக்குவித்தல், தென்மாகாணத்தில் தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் போன்றவற்றை நோக்காகக் கொண்டு இந்த மையம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான திட்டங்கள் சிறந்த பெறுபேறுகளைக் கொண்டவை என்பதை உறுதிப்படுத்தியுள்ளன.

பிஸ் பிளஸ் (Biz+) என்ற முதலீட்டு நிதித் திட்டத்தின் மூலம் 2011ஆம் ஆண்டு யூஎஸ்எயிட் இலங்கைக்கு உதவிகளை வழங்கியது. இது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளில் ஈடுபட்டுள்ள பெண்களை வலுப்படுத்துவது மற்றும் கிராமிய பொருளாதாரத்தை ஊக்குவிப்பது என்ற நோக்கத்தைக் கொண்டதாகும். இத்திட்டம் தற்பொழுது எட்டாவது வருடமாகத் தொடர்ந்து வருவதுடன், இந்தக் காலப் பகுதியில் 7,500 நேரடி வேலைவாய்ப்புக்களையும் 5,200ற்கும் அதிகமான மறைமுக வேலைவாய்ப்புக்களையும் உருவாக்க தனியார் துறையின் முதலீட்டுகளை ஏற்படுத்தியுள்ளது. இவை ஒரு தடவையிலான முதலீடுகள் அல்ல. பரம்பரைகளுக்கே இலாபத்தை வழங்குவதற்கான அர்ப்பணிப்புக்களாகும்.

எதிர்காலம் தொடர்பில் நாம் கவனம் செலுத்தும் அதேநேரம், நிகழ்காலப் பிரச்சினைகளையும் நாம் அணுகுகின்றோம். இந்து-பசுபிக் கொள்கைத் திட்டத்தின் கீழ் எமது பிரதான முன்னுரிமையானது புத்தாக்கம் மற்றும் அமைதியை ஊக்குவிக்கும் வரலாற்றைக் கொண்ட அமெரிக்க கம்பனிகளையும் உள்ளடக்கிய தனியார் துறை முதலீடுகளின் ஊடான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதாகும். 2017ஆம் ஆண்டில் இந்து-பசுபிக்கில் 1.8 ட்ரில்லியன் டொலர் பெறுமதியான இருதரப்பு வர்த்தகத்தை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது. இதனூடாக இந்தப் பிராந்தியத்துக்கு கிடைத்த அமெரிக்காவின் வெளிநாட்டு நேரடி முதலீடு 1 ட்ரில்லியன் டொலர் பெறுமதியாகும். இது கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலான காலப் பகுதியில் இந்தப் பிராந்தியத்துக்குக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளைவிட இரண்டு மடங்கு அதிகமானதாகும்.

எமது இந்த உறுதிமொழிகளைக் கட்டியெழுப்புவதற்கு நாம், சக்திவலு, டிஜிட்டல் பொருளாதாரம், உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் தனியார் துறையினருடனான எமது பங்காண்மைகளை விஸ்தரித்திருப்பதுடன், தொழில்நுட்ப உதவிகளுக்கு நிதியுதவியளிப்பது, சாத்தியக்கூற்று ஆய்வுகளை மேற்கொள்வது, முக்கிய துறைகளில் கட்டுப்பாட்டு மறுசீரமைப்புக்களை மேற்கொள்வது போன்ற விடயங்களுக்கு உதவியளித்து வருகின்றோம்.

அத்துடன் எமது அபிவிருத்தி நிதி திறன்களை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டிலும் ஈடுபட்டுள்ளோம். புதிய அமெரிக்க சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தை உருவாக்குவதற்கு கடந்த ஒக்டோபர் மாதம் 'பில்ட்' (BUILD Act) சட்டத்தில் கைச்சாத்திட்டுள்ளோம். இதன் ஊடாக எமது கடன் எல்லை 60 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளது. தற்பொழுதுள்ள கடன் எல்லையைவிட இது இரண்டு மடங்கு அதிகமானதாகும். இந்தப் பிராந்தியத்தில் தனியார் துறையினரின் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு இதற்கு மேலதிகமாக 30 பில்லியன் டொலர்களையும் ஒதுக்கியுள்ளோம். சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனமானது கடன்களை வழங்குவதுடன், கடன்களுக்கான உத்தரவாதம், புதிய முதலீடுகளுக்கான இடர் காப்புறுதி என்பவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்கும். அத்துடன் அவர்கள் பங்காண்மை நிதி நிறுவனங்களுடன் இணைந்து பங்கு முதலீடுகள், நிதி சாத்தியக்கூற்று ஆய்வுகள் அல்லது சாத்தியமான முதலீடுகளை உருவாக்குதல் போன்றவற்றில் ஈடுபடுவார்கள்.

மேலதிகமாக, மிலேனியம் சவால்கள் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையின் போக்குவரத்து மற்றும் காணித் துறைகளில் பொருளாதார இலக்குகளை நோக்கி கணிசமான செயற்பாடுகளில் அமெரிக்கா ஈடுபட்டுள்ளது. இலங்கையின் எதிர்காலம் சிறந்த பொருளாதார மலர்ச்சிக்கு இட்டுச்செல்லும் என்ற உறுதிமொழியுடனேயே இந்த ஒப்பந்தம் பூர்த்தியடையும். இலங்கையின் சந்தைக்குள் நுழைவதற்கு காத்திருப்பவர்களுக்கு சாத்தியமான சூழலை ஏற்படுத்த நாம் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதுடன், முதலீட்டாளர்களைக் கொண்டுவரும் எமது தரப்புப் பணியையும் சிறப்பாக முன்னெடுக்கின்றோம்.

பொருளாதார பங்காண்மை மற்றும் முதலீடுகளை மேற்கொள்வதற்கும், இந்து-பசுபிக் பிராந்தியத்தில் இருதரப்பு வர்த்தகங்களை ஏற்படுத்துவதற்கும் குறிப்பாக இலங்கைக்கும்

அமெரிக்காவுக்கும் இடையில் புதிய வாய்ப்புக்களை விஸ்தரித்துள்ளன என்பதையே இந்த செயற்பாடுகள் யாவும் எடுத்துக்கூறுகின்றன.

இந்த வாய்ப்புக்கள் மூலம் நிலைப்புத் தன்மையை ஏற்படுத்த இந்தப் பிராந்தியத்தில் எமது நாடு பாரியதொரு செல்வாக்கு மிக்க பங்களிப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. உதாரணமாக தனிப்பட்ட ஒரு கடன்வழங்குனரிடமிருந்து மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட உதவிகளால் ஏற்படக்கூடிய இக்கட்டான சூழ்நிலைகளைத் தவித்து, உண்மையான தேவையை நிறைவேற்றக் கூடிய தரமான உட்கட்டமைப்புக்களை வழங்கும் திட்டங்களுக்கு உதவி செய்ய இலங்கை போன்ற பங்காண்மை நாடுகளுடன் இணைந்து செயற்பட நாம் ஆர்வமாகவுள்ளோம்.

எரிசக்தி உற்பத்தி மற்றும் உட்கட்டமைப்பு உருவாக்கங்களில் அமெரிக்காவைச் சேர்ந்த நிறுவனங்கள் பாரிய வழங்கல்களை ஏற்கனவே மேற்கொண்டிருப்பதுடன், கொழும்பு துறைமுகத்தில் கப்பல்களை வழிநடத்துவதற்கு அமெரிக்காவின் தொழில்நுட்பம் உதவிவருகிறது. இலங்கை அரசாங்கத்துக்கு வருமானத்தை வழங்கக் கூடிய பாரியதொரு வளமாக துறைமுகம் காணப்படுவதுடன், பொருளாதார வளர்ச்சிக்கும் இது முக்கியமானதொன்றாகும். இந்துசமுத்திரத்தில் சரக்குப் போக்குவரத்தின் கேந்திரநிலையமாக மிளிரவேண்டும் என்ற இலங்கையின் இலக்கு முக்கியமானது.

பாதுகாப்பான கப்பல் பயணங்களை உறுதிப்படுத்தத் தேவையான வகையில் துறைமுகங்களை பாதுகாப்பானதாகப் பேணுவதில் அமெரிக்க அரசாங்கம் முக்கிய பங்காற்றி வருகிறது. 2005ஆம் ஆண்டு முதல் அமெரிக்க சுங்கம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு முகவர் அமைப்பு அதன் கென்டெய்னர் பாதுகாப்பு முயற்சியின் ஊடாக இலங்கையின் சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவுடன் இணைந்து, அமெரிக்காவை இறுதி இலக்காகக் கொண்டு பயணிக்கும் கப்பல்களின் கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகிறது. எரிசக்தி திணைக்களத்தின் இரண்டாம் தரப்பு பாதுகாப்பு பாரிய துறைமுக முன்னெடுப்பில் கொழும்பு துறைமுகமும் பங்கேற்றிருந்தது. இந்த முன்னெடுப்பானது இலங்கைக்கு கொண்டுவரப்படும் கதிரியக்க பொருட்களை கண்டறிய உதவுவதுடன், கதிரியக்க ஆயுதங்களின் பரவலையும் தடுக்கிறது.

பாதுகாப்பு உதவியாக, இலங்கையின் கடல் பாதுகாப்பு, வழிநடத்தும் சுதந்திரம், வங்காள விரிகுடா முயற்சியின் ஒரு அங்கமாக விழிப்புணர்வுத்திட்டம் என்பவற்றுக்காக 39 மில்லியன் டொலர்களை வழங்கவும் நாங்கள் திட்டமிட்டுள்ளோம். இது தெற்காசியாவில் மனிதநேய உதவிகள் மற்றும் இடர் மீட்பு திறனங்களையும் வளர்ப்பதற்கு உதவியாகவிருக்கும்.

இந்த முயற்சிகள் பொருளாதார ரீதியில் உதவியளிப்பது முக்கியமானதாக இருந்தாலும், இந்தப் பிராந்தியத்தில் உள்ள இலங்கை மற்றும் ஏனைய நாடுகள் கடற்பரப்பை சட்டபூர்வமான பொருளாதார நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்துவதை உறுதிப்படுத்துவது அவசியமாகும். கடற்கொள்ளைகளை ஒழிப்பது, சட்டவிரோதமான பதிவுசெய்யப்படா மீன்பிடி மற்றும் கடத்தல்களைத் தடுப்பது தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

எமது இருநாட்டு படைகளும் இடர் முகாமைத்துவம், மனிதநேய உதவிகள் மற்றும் கடல்பாதுகாப்பு போன்ற விடயங்களில் திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக இணைந்து பயிற்சிகளைப் பெறுகின்றன. இந்த இணைந்த பயிற்சியானது பயன்தரும் வகையில் அமைந்திருப்பதுடன், அமைதிகாக்கும் படையினராக மாறிவரும் இலங்கை படையினருக்கு இது உதவியாகவிருக்கும்.

அமெரிக்க கரையோர பாதுகாப்புப் படையின் கட்டர் கப்பல் கடந்த ஓகஸ்ட் மாதம் ஹொனலுலுவில் இலங்கை கடற்படையிடம் கையளிக்கப்பட்டதுடன், இது 2018 ஆம்

ஆண்டில் நடைபெற்ற பசுபிக் வலய பயிற்சி நடவடிக்கைகளில் (Rim of the Pacific Exercises) முதல் தடவையாகப் பங்கேற்றிருந்தது.

இலங்கையுடனான எமது பங்காண்மையானது சகல துறைகளையும் உள்ளடக்கியதாகவுள்ளது என்பதுடன், இரு தரப்புக்கும் நன்மை ஏற்படுவது, வெளிப்படைத் தன்மை கொண்டது, மற்றும் எதிர்கால தலைமுறையினருக்கு நன்மை ஏற்படுத்தக் கூடியவகையில் நிலைப்புத் தன்மையானது என்பது முக்கியமானதாகும்.

இந்து-பசுபிக் பிராந்தியத்தில் அமெரிக்க மேலும் தனது ஈடுபாட்டை அதிகரிப்பதில் கவனம் செலுத்தியிருக்கும் நிலையில், இந்த செயற்றிட்டத்தில் இலங்கை வலுவான பங்குதாரராகவும், இத்திட்டத்தை முன்கொண்டு செல்வதற்கான தலைமைத்துவத்தை வழங்கும் பங்காளராகவும் இருக்க வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

எமது இந்த சகல முயற்சிகளுக்கும் பல்வேறு மட்டங்களில் ஒத்துழைப்புக்களை வழங்கிவரும் இலங்கையின் பங்காண்மைக்கு பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன் எனது உரையை முடிக்கின்றேன்.

இத்துடன் உரையை முடித்துக் கொள்வதுடன், நீங்கள் முன்வைக்கும் கேள்விகளுக்கு பதில்களை வழங்க எதிர்பார்க்கின்றேன்.